இணைப்பு I.

[..149ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண், 799-க்கான விடையைக் காண்க.]

தமிழ்நாடு சட்டப்பேரவைமுன் வைக்கப்படும் விவர அறிக்கை.

(திரு. வ. மு. சுப்பிரமணியன், எம். எல். ஏ., அவர்களின் வினா எண், 5,337-க்கான விடையைக் காண்க.)

வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதி நிவாரணத் திட்டத்தின் கீழ் குறிப்பிட்ட திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

(2) இராமநாதபுரம் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டம் ஆகும். வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதி நிவாரணத் திட்டத்தின்கீழ் 2,450 பனைத் தொழில் வல்லுநர்களுக்கு நிவாரணமளிக்க, ரூபாய் 22.08 இலட்சம் செலவில் ஒரு திட்டம் தீட்டப்பட்டு இத்திட்டத்தை செயல்படுத்த தமிழக அரசு 1977-78-ல் ரூபாய் 9·58 இலட்சம் மானியமாகவும், ரூபாய் 12·50 இலட்சம் அரசுடமையாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து கடனாகப் பெறவும் அனுமதித்துள்ளது :—

திட்டங்களின் விவரம் வருமாறு :—

	வங்கிக் கடன் உதவி (இலட்சத்தில்.)	அரசு மானியம் (இலட்சத்தில்.)
1. 1,000 பனைத் தொழில் வல்லுநர்களுக்கு தலா ரூபாய் 1,100 கடனாகவும், ரூபாய் 367 மானியமாகவும் (மர வாடகை)	11·00	3·67
2. பனைப்பாய் முடைவோர் 100 நபர்களுக்கு தலா ரூபாய் 150 கடனாகவும் ரூபாய் 50 மானியமாகவும்	1·50	0·50

TRUTH ALONE TRIUMPHS

1979 ஏப்ரல் 24]

திட்டங்களின் விபரம் வருமாறு—தொடர்ச்சி,

	வங்கிக் கடன் உதவி (இலட்சத்தில்,)	அரசு மானியம் (இலட்சத்தில்.)
3. நிர்வாக மானியம் 36 சங்கங்களுக்குத் தலா ரூபாய் 2,690 வீதம்		0·87
4. பயிற்சி—		
(1) பனை ஓலைப் பயிற்சி நிலையங்கள் 10 (1 நிலையத்துக்கு ரூபாய் 8,100 வீதம்) 200 பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளிக்க		0·81
(2) நவீன முறை பயிற்சி நிலையங்கள் 7. 140 பேர்களுக்கு பயிற்சி அளிக்க 1 நிலையத்துக்கு ரூபாய் 1,200 வீதம் ..		0·84
5. புதிய பனந்தோப்பு அமைத்தல் 5 இலட்சம் பனங்கொட்டைகள் நடுதல்		2·25
6. வாரக் கடன் பொறுப்பு நிதி		0·54
மொத்தம்	12·50	9·58

இதற்குண்டான மானியத் தொகையை தமிழக அரசு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு வழங்கி உள்ளது.

இதைத் தவிர 1977–78 ஆம் ஆண்டில் கதர் கிராமத் தொழில் வாரியம் தமிழ்நாடு மாநில பனை வெல்ல கூட்டுறவு இணையத்தின் மூலமாக இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள கிராம மக்களுக்குப் பனைத் தொழில் மூலம் வேலை வாய்ப்புக்கள் அளிக்க, பனைத் தொழில் வல்லுநர்களுக்கும், பாய், பெட்டி, முடைவோர்களுக்கும், தும்பு சேகரிப்பவர்களுக்கும், கிட்டங்கி கட்டுவதற்கும், பதநீர் விற்பனை செய்யவும் ரூபாய் 54,600 மானியமாகவும் ரூபாய் 6,25,000 கடனாகவும் பம்பாய் கதர் கிராமத் தொழில் ஆணைக்குழுவால் அளிக்கப்பட்ட நிதி உதவி

யிலிருந்து வழங்கியுள்ளது. இதனால் 1,050 பனைத் தொழில் வல்லுநர்கள் பயன்பெறுவார்கள், இராமநாதபுரம், மதுரை ஆகிய இரு மாவட்டங்களுக்கும் ஒரு மாவட்ட சம்மேளனம் மதுரையில் இயங்குகிறது.

இணைப்பு II.

[..151ம் பக்கத்தில் உள்ள உடுக்குறியிட்ட வினா எண், 800-க்கான விடையைக் காண்க.]

(அ) ஆம்,

(ஆ) மத்திய அரசு பால் பெருக்குப் பகுதிகளில் அமுல் படுத்துவதற்கான பலவகைப்பட்ட பால் பெருக்குத் திட்டங்களை அங்கீகரித்துள்ளது. அவைகளில் சில புதிய திட்டங்களாகும். மற்றவை பழையனவற்றின் தொடர்ச்சியாகும். அத் திட்டங்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன:—

1, மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (நீலகிரி மாவட்டம்):

மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் நீலகிரி மாவட்டத்தில் 1975–76 ஆம் ஆண்டு முதல் அமுல் செய்யப்பட்டு வருகிறது. வேறு பல திட்டங்களுக்குள் பால் பெருக்குத் திட்டத்திற்காக முதலில் ரூபாய் 84 இலட்சம் ஒதுக்கப்பட்டு, இப்பணி தமிழ்நாடு பால்வள நிறுவனத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டது. இப்பால் பெருக்குத் திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் 70 பால் வழங்கும் சங்கங்கள் அமைத்தலும், 30,000 கால்நடைகளுக்கு மருத்துவ வசதிகள் அளிப்பதும். 25,000 விவசாயிகளுக்கு பயனளிப்பதும் ஆகும்.

பல்வேறு பால் பெருக்கு திட்டங்களுக்காக 1978 ஜூலை மாத கடைசி வரை தமிழக அரசு ரூபாய் 67·96 இலட்சங்கள் அனுமதி அளித்தது, 66 கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் தேவையான சாதனங்கள் உடையனவாக அமைக்கப் பட்டன. போத்தகிரி, கூடலூர், மசினகுடி, நடுவட்டம் போன்ற இடங்களில் கால்நடை பராமரிப்பு நிலையங்கள் அமைத்துக் கால் நடை விவசாயிகளுக்குத் தேவையான மருத்துவ வசதிகளையும். செயற்கை முறை கருவூட்டலையும் அருகிலேயேயிருந்து வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இரண்டு குளிரூட்டும் நிலையங்கள் கோத்தகிரியிலும். கூடலூரிலும் அமைக்கப்பட்டு வரு